அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.—(குறள்.)

"From Wisdom's vaunted lore what doth the learner gain
If as his own he guard no other's souls from pain."


# TIT-BITS OF ANIMAL LIFE.

A QUARTERLY ADVOCATE OF HUMANITY FOR SCHOOLS AND FAMILIES.

# ஜந்து வர்த்தமான ஸாரம்.

பாடசாலைகளுக்கும் வீடுகளுக்கும் உபயோகப்படும்

ஜீவகாருண்ணிய விளக்க மும்மாதப் பத்திரிகை.

சம்புடம் I.] DECEMBER, 1901-ஹ டிசெம்பர். [இலக்கம். 4.


## வாயில்லா ஜந்துக்களுக்குள்ள புத்தி விசேஷம்.

**குதிரை.**—பிராணி வர்க்கங்களில் யானைகள் மிகுந்த அறிவுள்ளனவென்றும், யானைக்கு இரண்டாவது நாய்கள் அற்புதமான புத்திகூர்மை யுடையனவென்றும், நாய்க்குக் கீழ்ப்பட்டது பூனை யென்றும், குதிரைகள் அவ்வளவு புத்திகூர்மை யுடையவை யல்லவென்றும் சொல்லுகிறார்கள். யோசித்துப்பார்க்குமளவில் குதிரைகளுக்கு ஞாபக சக்தி மிகவும் அதிகமென விளங்குகின்றது. ஒரு சிறு கதை இதற்குத் திருஷ்டாந்தமா யெடுத்துக் காட்டுவோம்: வயதுமுதிர்ந்த ஒரு பெருமாட்டி பட்டாளத்தில் பழகிய குதிரையொன்றை விலைக்கு வாங்கி வளர்த்துவந்தாள். அது அவளுக்கு வசப்பட்டு அவள் சொற்படிகேட்டு அடங்கி நடந்து வந்தது. இப்படியிருக்க ஒருநாள் அவள் ஒரு பெரும்பாதை வழியே சவாரிபோக நேரிட்டது. அவ்வழியில் குதிரைப்பட்டாளமொன்று நின்றது. அந்தச்சமயம் அப்பட்டாளத்தில் போர்க்காளமூத, முன்பழக்கமான அந்தக் குழலோசை கேட்டவுடன் அக்கிழக்குதிரை காதை நெறித்துக்கொண்டு வேகமாயோடி அங்குள்ள குதிரை வரிசையில் கலந்து நின்றது. யஜமானி தன்னை யெவ்வளவு தடைசெய்தும் கேளாமல் அப்பட்டாளத்துடன் செல்லவே அது பிரியப்பட்டது.

**எலிகள்.**—நாய்களுக்குள்ள நேசிக்கும் குணம் எலிகளுக்கு முண்டென்று ஒருவன் உரைப்பது ஒளியும் இருளும் ஒருதன்மையானவை யென்று கூறுவதுபோலாகுமென்று பலரெண்ணுவார்கள். ஆயினும் நேசிக்கும் நற்குணம் எலிக்கும் உண்டென்று பிரஞ்சுதேசத்தவரான டியூட் என்பவர் தமது சரித்திரத்தில் சொல்லுகிறார். அவர் 1749-ம் வருஷம் அரசனது கோபத்திற்காளாகி முப்பத்தைந்து வருஷகாலம் சிறைச்சாலையில் அடைபட்டிருந்ததாகவும், அக்காலத்தில் சில எலிகளுடன் நேசித்து அவற்றோடு கூடியிருந்தே காலங்கழித்ததாகவும் கூறியிருக்கிறார். அவர் சிறைப்பட்ட சிலகாலம்வரையில் பொழுதுபோனால் அவரடைபட்டிருந்த அறையில் எலிகள் அநேகமாக இரைதேட வெளிப்பட்டுவந்து அதிகமான உபத்திரவஞ் செய்தன; தூங்கும்பொழுது அவருடம்பையும் பீறித் தொந்தரை செய்வதுண்டு. அவ்வறைக்குள் காற்று வரும்படிவிட்ட ஒரு சிறு சாளரத்தின்வழியே அந்த எலிகள் நுழைந்துவந்தன. அந்தச் சாளரம் தரைமட்டத்திற்கு இரண்டடி உயரத்திற்கு மேலுள்ளது. அதற்குக் கீழ் இரண்டு படிகள் உண்டு. அந்தப் படியில் அவர் எப்பொழுதாவது காற்றுக்குப் போய் உட்காருவார். அப்படி உட்காந்திருந்தபொழுது ஒருநாள் அந்தச் சாளரத்தின் எதிர்முனையில் மிகப்பெரிய எலியொன்று தென்பட்டது. உடனே அவர் ஒரு சிறு ரொட்டித் துண்டை அதன்ருகில் எறிந்தார்; அதனை அவ்வெலி தின்றுவிட்டது. பிறகு மற்றொரு துண்டை யெறிந்தார்; அதையும் எலி தின்றது. அப்படியே அவர் கையிலிருந்த ரொட்டி முழுமையும் செலவாகிவிட்டது.

மறுநாள் அதேவேளையில் அந்த எலி மறுபடி அவ்விடத்திற்கு வந்தது. அன்றையதினமும் அவர் முன்போலவே ரொட்டித் துண்டுகளை யெறிந்தார்; ஆனால் முதனாள்போல அவ்வளவு தூரத்தில் எறியாமல் கொஞ்சங் கொஞ்சமாக எலி தன் அருகே வரும்படி கிட்டக்கிட்ட எறிந்தார். அப்படியே எலி சமீபத்தில் வரப் பழகிக் கடைசியில் அவரது கையிலிருந்தே ரொட்டியைக் கடித்

துத் தின்னப் பழகிப்போயிற்று. சிலநாளைக்குள் அது எப்பொழுதும் அவரது மடியிலேயே உட்காந்து அவர் கொடுப்பதைத் தின்று களிப்படைந்திருக்கும்படி அவ்வளவு பழக்கமாகிவிட்டது.

இப்படியிருக்கச் சிலநாளைக்குப் பிறகு அந்தப் பெரிய எலி மற்றொரு எலியை யழைத்துக்கொண்டு வந்தது. அதுவும் அதிசீக்கிரமே அவரிடத்தில் நேசமுள்ளதாயிற்று. பிறகு அந்த இரண்டு எலிகளும் அந்தச் சிறைச்சாலையே தமக்கு வீடாகக் கொண்டிருந்தன. எப்பொழுதாவது வெளியே போனால் திரும்பி வரும்பொழுது வேறொரு எலியைக் கூட்டிக் கொண்டுவரும்; பழகிய எலிகளைக் கண்டு அந்தப் புது எலியும் அவரிடத்தில் அச்சமின்றி இணங்கலாயிற்று. இப்படியே அந்தச் சிறிய சிறைச்சாலையில் பத்து எலிகள் சேர்ந்து கொண்டன. அவர் அந்த எலிகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி வெவ்வேறு பெயரிட்டு, அந்தப் பெயர்களை அவை தெரிந்துகொண்டு தான் கூப்பிடும்போது தனித்தனி ஒவ்வொன்றும் தன்னிடம் வரும்படியாகவும் கற்பித்தார். அதன்பிறகு அவர் அவற்றுடனே கூடி விளையாடலானார். அந்த எலிகள் பற்பல விநோதமான வித்தைகள் கற்றுக் கொண்டன. இந்த எலிகளுடைய நேசத்தினால் தமக்குண்டான ஆநந்தத்தை அவர்தாமே சொல்லியிருப்பதாவது: "இந்த எளிய ஜந்துக்களுடனே கூடி இரண்டு வருஷகாலம் எனக்கு உண்டான சங்கடங்களையெல்லாம் என் மனத்தை விட்டு விலக்கப் பாடுபட்டேன். சில சமயம் என் மனதில் ஒரு துன்பமும் தோன்றாது பேரானந்த முண்டாகும். கருணைக்கடலான கடவுள் நாம் துன்பந் தீர்ந்திருத்தற்பொருட்டே இந்த இன்பத்தை நமக்குக் கொடுத்தாரென் றெண்ணினேன். நான் அவைகளுடன் கூடி விளையாடுங் காலத்தில் இவ்வுலகமே என் புத்திக்குத் தோற்றாமல் கனவுகண்டதுபோலப் பேரானந்த முற்றிருந்தேன்" என்று கூறியிருக்கிறார். ஊசியை ஊசிக் காந்தம் இழுக்குமென்பதுபோல் உத்தம சிநேகம் வீணாகாமல் இனிதோங்கும்.

## ஒரு சிறந்த திருஷ்டாந்தம்.

நாட்டில் சிறந்த பிரபுவாயிருந்த ஒருவர் முதலில் காட்டு மிருகங்களை வேட்டையாடுவது, பறவைகளைச் சுடுவது, மீன் பிடிப்பது முதலான நாட்டு ஜனங்களுக்குரிய முரட்டுத் தொழில்களில் காலங்கழித்துவந்தார். இந்தத் தொழில்களில் அவர் தேர்ந்த நிபுணர். அன்றியும் கண்டபடி குதிரையேறி அஞ்சாது சவாரிசெய்பவர். இளங்குதிரைகளைப் பழக்குவதிலும் அவர்க்குத் திறமை யதிகம். அப்படியிருந்தும் இந்த வியாபாரங்களை அவர் சில வருஷங்களுக்குப் பிறகு கையாளாது முற்று மொழித்துவிட்டார். இவ்விழிதொழில்களை அவர் கைவிட்டு நற்றுறையிலிறங்கியது பைக்கு என்னும் பெருமாட்டியினது நற்போதனையினா லென்கிறார்கள். உண்மை யதுவன்று. அந்தப் பிரபு மிகுந்த தயாளகுணமுள்ளவர். தாம் செய்யும் வேட்டை முதலான கொடுந்தொழில்களால் மிருகங்கள் படும் வேதனையைக் கண்டு அவரே உள்ளம் நடுங்கி, இவை மிகக் கொடுமையான செய்கைகளென்று அறிந்து கைவிடலானார்.

அந்தப் பிரபு பொடோகிராப்பு என்கிற சாயையுருவப்படம் பிடிப்பதிலும், இனிப்பான உபந்நியாஸங்கள் செய்வதிலும் முன்னமே தேர்ச்சி பெற்றவரா யிருந்ததனால், வேட்டமாடுந் தொழிலைக் கைவிட்டபிறகு அவர் ஜீவகாருணியத்தைப் பற்றிப் பிரசங்கம் செய்வதையே தமக்கு நல்ல காலக்ஷேபமாகக் கைக்கொண்டார். தேனீக்களை அன்புடனே போற்றி வளர்ப்பதனா லுண்டாகும் நன்மை யின்னதென்பதை நாடுகளிலுள்ள குடியானவர்களுக்கும் பயிர்த் தொழிலாளிகளுக்கும் போதித்தார். தேன் கூட்டினின்றும் தேனைப் பெறுவதற்காக அக்கூட்டில் மொய்த்துக்கொண்டிருக்கும் தேனீக்களைத் தீயும் புகையு மிட்டுத் துன்பப்படுத்தி யோட்டுவது கெட்டவழக்கமென்று அறிவித்து, தேன் பெறுவதற்காக இக்காலத்தவர் கையாண்டுவரும் நல்ல உபாயத்தையும் எடுத்துக் காட்டினார். அன்றியும் அவர் தொழிலாளிகளைப் பல வகுப்பினராகப் பிரித்து, அவர்களுக்கு அவர் தாம் நேராகவே தச்சுவேலை, வெண்ணெயெடுக்கும் விதம், துணி வெளுப்பதற்குச் சிறந்த நூதனமான வழி முதலானவைகளைக் கற்பித்தார். இவ்விதமாக எளிய கூலி வேலைக்காரர்களுடைய புத்திகளைச் சீர்ப்படுத்துவதிலேயே அவர் தமது ஒழிவான காலங்களைச் செலவழிக்கலானார். அது விஷயத்தில் அவர் ஒருபொழுதும் சோர்வடையவில்லை.

அந்தப் பிரபு தமது செய்தொழிலை மாற்றியதனால் அவர் எளிய ஜனங்களிடத்தில் மாத்திரமே இப்படி அபிமானமுள்ளவ ரானாரென்று எண்ண வேண்டாம்: வாயில்லாப் பிராணிகளைப் பரிபாலிப்பதிலும் பக்ஷமுள்ளவரானார். தம்முடைய புலங்களில் வைத்திருந்த கூரான பல்லுள்ள பொறிகளையெல்லாம் எடுத்துவிட்டார். வயது தளர்ந்தாவது வேறு காரணங்களாலாவது உழைக்கத் திறமற்றவையான குதிரைகளை ஒரு வேலைக்கு முபயோகப் படுத்தாமல் புல் தரைகளில் சுகமாக மேய்ந்து தம்மிஷ்டப்படி திரிய விட்டுவிடலானார். அப்படி யநேகம் குதிரைகள் இப்பொழுது வேலையொழிந்து சுகமாக ஜீவித்துக்கொண்டிருக்கின்றன.

## வேட்டையாடிய வேந்தன் மகனுக்கு வந்த விபத்து.

கிரீஸ்தேசத்திலே சிலநாளைக்குமுன்னே அத்தேசத்து ராஜகுமாரன் ராஜாவினது தோட்டத்தில் வேட்டையாடிக்கொண்டிருந்தான். அப்பொழுது அவ்விடம் வந்த இரண்டு சேவகர்கள் அங்கு யாரோ ஒருவன் வேட்டைக்காரரது வேஷந்தரித்து வேட்டையாடுவது கண்டு அரசனது தோட்டத்தில் நுழைந்து பறவைகளை வேட்டையாடுவது குற்றமான காரியமென்று கண்டித்துச் சொன்னார்கள். இராஜகுமாரன் அவர்களது சொல்லைக் கவனியாமலே தன் காரியத்தில் கண்ணாயிருந்தான். அதைக்கண்டு அந்தச் சேவகர்கள் அவனைப் பிடித்துக்கொண்டு, தங்களுடனே சமீபத்திலுள்ள போலீசு உத்தியோகசாலைக்கு வரும்படி அவனுக்குக் கட்டளையிட்டார்கள். அப்படியே புறப்பட்டுப்போகையில் நடுவழியிலே, இளவரசன் தன்னை அவர்கள் விட்டுவிடும்பக்ஷத்தில் அவர்களுக்குப் பரிதானங் கொடுப்பதாகச் சொல்லி வேண்டிக்கொண்டான். அவன் எவ்வளவு வேண்டியும் அதை அவர்கள் கேளாமல் அவனை நெட்டித்தள்ளிக்கொண்டுபோய்ப் போலீசு அதிகாரியினிடஞ் சேர்த்து, அவன்மீது வேட்டையாடிய குற்றமொன்றுமாத்திரமேயன்றி, பரிதானங் கொடுக்கப் பிரயத்தனப்பட்டதாகிய மற்றொரு பெரிய குற்றத்தையும் சாட்டினார்கள்.

போலீசு அதிகாரி அக்குற்றவாளியை விசாரித்தபொழுது, அவன் யாரென்று அவனது பெயரைக் கேட்கையில், இளவரசன் தானின்னானென்று தன் விவரமெடுத்துக் கூறினான். அதைக் கேட்டவுடனே அவனைப் பிடித்துவந்த இரண்டு சேவகர்களும் மிகவும் பயந்து நடுநடுங்கி நின்றார்கள். அதுகண்டு ராஜகுமாரன் அச்சேவகர்களுடைய உண்மைதவறாத உத்தமகுணத்திற்காக மிகவும் கொண்டாடி, முன்பு தான் அவர்களுக்குப் பரிதானங் கொடுப்பதாகக் கேட்டுக்கொண்ட தொகையினும் இருமடங்கு அதிகமான பொருள் அவர்களுக்கு வெகுமதியளித்து அவர்களை மிகவும் சந்தோஷப்படுத்தினான்.

## யஜமானனது குரலையறிந்த பந்தயக் குதிரை.

நெடுந்தூரத்திற் கப்பால் அரபிதேசத்தில் இரண்டு மனிதர்களிருந்தார்கள். அவர்களில் ஒருவன் தனிகன்; மற்றொருவன் தரித்திரன். அந்தத் தரித்திரன் ஒரு பெருங்காட்டில் ஒரு கூடாரத்திலே வசித்துக்கொண்டிருந்தான். அவ்விடத்தைச் சுற்றி அனேகம் மைல் தூரம்வரையில் வீடுகளேயில்லை. அங்கே மனிதசஞ்சாரமும் அதிகமாய்க் கிடையாது. அந்த எளிய மனிதனுக்கு ஒசீன் என்று பெயர். சிலசமயம் சோற்றுக்கும் வழியில்லாதபடி அவன் அவ்வளவு தரித்திரனாயிருந்தாலும், அவன் வசித்தஇடம் நிர்மானுஷியமான வனாந்தரமாயிருந்தாலும், அவ்விடத்தில் அவன் சந்தோஷமாகவே வசித்துக்கொண்டிருந்தான்.

முன் ஒரு காலத்தில் ஒசீனும் தனிகனாயிருந்தவனே. ஆயினும் அதுபோய் வெகுநாளாய்விட்டது. அந்தக்காலம் ஞாபகம்வரும்படி இப்பொழுது அவனுக்கிருந்த ஆஸ்தி அவனுடைய ஒரே ஒரு குதிரைதான். அந்தக் குதிரைக்கு மாணிக்கம் என்று பெயர். ஒசீன் சிறுபையனாயிருந்த நாள்முதல் மாணிக்கம் அவனுக்குச் சொந்தமான குதிரையாயிருந்தது. அவனுக்கு அந்தக் குதிரையினிடத்திலிருந்த பிரியம் உலகத்தில் மற்றெந்தப் பொருளிடத்திலுமில்லை. அப்படி அவன் அந்தக் குதிரையினிடத்தில் அதிகமான ஆசை வைத்திருந்ததனாலும், குதிரை எப்பொழுதும் அவனோடு கூடவே யிருந்ததனாலும், அவனுக்கு ஒருவிதமான துக்கமும் தோன்றவில்லை; தான் தனித்திருப்பதும் தோன்றவேயில்லை.

மற்றொரு மனிதன் மிகுந்த தனிகன். அவனுக்குச் சரியான பணக்காரன் அத்தேசத்தில் எவனுமில்லை. அவன் ஒசீன் கூடாரத்துக்கு வெகு தூரமப்பால் ஒரு நகரத்தில் வசித்துக்கொண்டிருந்தான். அவனுக்குத் துவால் என்று பெயர். அவனுக்கு ஒன்றாலொன்று குறைவில்லை. அவனுக்கிருந்த குதிரைகளும் ஒட்டைகளும் வயல்களும் வீடுகளும் உலகத்தில் மற்றெவருக்குமில்லை. ஆயினும் அவனுக்கு மனதில் திருப்திமாத்திரம் உண்டாகவில்லை. அவன் மாணிக்கம் என்கிற குதிரையைப் பலதடவைகளில் கண்டும் கேட்டும் இருந்தான். அது அத்தேசத்தில் ஜெயிக்காத பந்தயமில்லையென்றும், பந்தய ஓட்டத்தில் அதை ஜெயித்த குதிரை வேறொன்றுமில்லையென்றும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். அதனால் அவன் அக்குதிரையைத் தானெப்படியாவது பெற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆசைகொண்டு, எவ்வளவு பொருள் கொடுத்தாயினும் அதைக் கிரயத்திற்கு வாங்கிக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தான்.

அப்படியே அவன் ஒசீனினிடத்திற்குப் போய், நண்பனே, நீ மிகவும் எழையன்றோ? உன்னைப் பணக்காரனாக்க வேண்டுமென்று நான் உன்னிடத்திற்கு வந்தேன். மாணிக்கத்தை நீ எனக்குக் கொடுத்துவிடு; உன் வாழ்நாள் முழுமைக்கும் நீ சுகமாக வாழ உனக்கு எவ்வளவு திரவியம் வேண்டுமோ அவ்வளவும் நான் இப்பொழுதே உனக்குக் கொடுத்துவிடுகிறேன் என்று சொன்னான்.

அதைக்கேட்டு ஒசீன் சிரித்துத், தோழனே, நீ என்னைப் பணக்காரனாக்கிவிடுவதாகச் சொல்லுகிறாய்; அதனோடுகூட எனக்கு என் பிராணனைப்பார்க்கிலும் அதிக பிரியமான என் மாணிக்கத்தையும் கொடுத்துவிடச் சொல்லிக் கேட்கிறாயே, எனக்கு என் மாணிக்கமே பெருஞ் செல்வம். அதை நான் கொடுத்துவிட்டால், எனக்குச் சௌக்கியமுண்டாக்குகிற செல்வம் வேறொன்றும் உலகிலில்லையே என்று மறுமொழி சொன்னான்.

அதைக்கேட்டுத் துவால் அதிக கோபத்துடனே அவ்விடம் விட்டு எழுந்து போயினான். பணங்கொடுத்தால் தனக்கு வேண்டியவைகளையெல்லாம் தான் வாங்கிக்கொள்ளக் கூடுமென்று இதுவரையில் அவன் எண்ணிக்கொண்டிருந்தான். இப்பொழுதுதான் முதல் தடவை அவனுடைய எண்ணம் நிறைவேறாமல் மறுக்கப்பட்டது.

இப்படியே சில மாதங்கள் கழிந்தன. துவால் மறுபடியும் ஒசீன் கூடாரத்திற்குப் போனான். அங்கே போய் அவனைக் கண்டு, தோழனே, நீ முன்பு என்னிடத்தில் பணம் வாங்கிக்கொண்டு உன் மாணிக்கத்தைக் கொடுக்கமாட்டேன் என்று சொன்னாயே; அது எனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லை. நீ உதாரகுணம் உள்ளவனென்பது எனக்கு நன்றாய்த் தெரியும்; பணம் பெற்றுக் கொள்ளாமலே இனாமாகக் கொடுக்க நீ இஷ்டப்பட்டிருக்கிறபோது, நீ அதை விலைக்கு விற்கச் சம்மதப்படமாட்டாய் அன்றோ? என் மகன் இப்பொழுது என்னை உன்னிடத்திற்கு அனுப்பினான். அவன் உன் மாணிக்கம் தனக்கு வேண்டுமென்று அதிகமாய் ஆசைப்படுகிறான். நீ அதை எப்படியாகிலும் அவனுக்குக் கொடுத்து அவனாசையைத் தணிக்கவேண்டும் என்று வருந்திக் கேட்டான்.

அதைக் கேட்டு ஒசீன் ஒன்றுந் தோன்றாமல் உடனே யெழுந்து தன் குதிரையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு சற்றுப் பிரமித்து நின்றான்.

பிறகு அவன் பணக்காரனைப் பார்த்து, நண்பனே, நான் உன் மகனைப்போலவே பத்து வயது பிள்ளையாயிருந்தகாலத்தில் ஒருநாள் என் தந்தை இக்குதிரையை எனக்குச் சொந்தமாகக் கொடுத்தார். இது மிகவும் அன்புள்ளதாயிருந்ததனால் நான் இதற்கு மாணிக்கமென்று பெயரிட்டேன். இதுவரையில் இதனோடுகூடி நான் என்னுடைய காலத்தை எவ்வளவோ சுகமாகக் கழித்தேன். நாளுக்குநாள் எனக்கு இதனிடத்தில் ஆசை மிகவும் அதிகமாகப் பெருகியது. இப்பொழுது ஒரு நிமிஷம் இதைக் காணாமற்போனாலும் என் மனதில் அதிகமான சங்கடம் உண்டாகும்படி அவ்வளவு பிரீதி எனக்கு இதனிடத்தில் உண்டாகிவிட்டது. இப்பொழுது நீ இதை என்னிடத்தில் இருக்கவொட்டாமல் பறித்துக்கொள்ள என் இவ்வளவு ஆசைப்படுகிறாய்? இது உலகத்தில் எங்குமில்லாத இவ்வளவு சிறந்த குதிரையாயும், எல்லாப் பந்தயங்களிலும் ஜெயம் பெற்றதாயும், மற்றைக் குதிரைகளுக்கெல்லாம் வெகுநேரம் முன்னமே வெற்றிபெறுமிடத்திற்கு வந்து சேருவதாயும் இல்லாவிட்டால் இதைப்பற்றி நீ இவ்வளவு கவலை கொள்ளமாட்டாயன்றோ! யாவரும் இதை விசேஷமாகப் புகழ்ந்து பேசுவதனாலும், இது ஒரு பொழுதும் தோல்வியடையாம விருப்பதனாலுமன்றோ இதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று நீ இவ்வளவு ஆவல்கொண்டு கேட்கிறாய். உன் மகனிடத்தில் உனக்கு எவ்வளவோ ஆசையிருக்கிறதே! அவனை யாராவது பிடித்து இழுத்துக்கொண்டு போய்விட்டால் உனக்கு எப்படியிருக்கும்? என் மாணிக்கம் எனக்கு அப்படியேதான். இனிமேல் நீ இதன்மேல் ஆசை வைக்காதே, நான் இதை ஒரு நிமிஷமும் விட்டுப் பிரிந்து பிழைத்திருக்கமாட்டேன் என்று சொல்லி மறுத்துவிட்டான்.

துவால் அதைக் கேட்டு மிகுந்த மனக்கிலேசத்துடனே திரும்பிப் போய்விட்டான். வீடுசேர்ந்தவுடன் அவன் ஒரு அறையில் புகுந்து கதவை மூடிக்கொண்டு, பகலில் ஆகாரமும், இரவில் நித்திரையுமில்லாமல், அந்தக் குதிரைவிசாரமே பெரிய விசாரமாகப் புரண்டு தவித்தான்.

ஒசீன் தன் மாணிக்கத்தைக் கொடுக்கமாட்டேனென்று மறுக்கவே, துவாலுக்கு அதை யெவ்விதமாயாவது தான் பெற்றுக்கொள்ள வேண்டுமென்கிற பேராசை அதிகமாகிவிட்டது. ஒசீனுடைய சவுக்கியத்தில் அவனுக்குச் சிறிதும் கவலையில்லை; தன் பெருமையையே அவன் பெரிதாகவெண்ணினான்.

இப்படியிருக்க ஒருநாளிராத்திரி துவால் தூக்கமின்றி விழித்துக்கொண்டிருக்கையில் அவன் மனத்தில் ஒரு துராலோசனை யுண்டாயிற்று. சில நிமிஷங்களுக்குப்பிறகு அவன் வீட்டைவிட்டு வெளிப்பட்டுக் குதிரைமீதேறி வெகு வேகமாக அந்நாட்டினிடையே சவாரிசெய்துகொண்டு போனான்.

இப்பொழுது மூன்றாவதுதடவை துவால் ஒசீன் கூடாரத்திற்குச் சென்றான். அவ்விடஞ் சேர்ந்தவுடனே அவன் குதிரையினின்று மிறங்கி நாற்புறமும் சுற்றிப்பார்த்தான். அங்கொருவரும் கண்ணுக்குப் புலப்படவில்லை; சிறிதேனும் சந்தடியுமில்லை; எங்கும் கம்மென்று நிச்சப்தமாயிருந்தது. துவால் கூடாரத்திற்குள் எட்டிப்பார்த்தான். அங்கே ஒசீன் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் அவனது மாணிக்கம் நின்றுகொண்டிருந்தது. அதன் கடிவாளத்தை ஒசீன் தன் இடுப்பில் உறுதியாகக் கட்டிக்கொண்டிருந்தான். மாணிக்கத்திற்குப் பக்கத்தில் மற்றொரு குதிரை சேணம் போட்டுச் சித்தமாக நின்றுகொண்டிருந்தது.

துவால் திரும்பி வெளியே வந்து தனக்குள் தானே சொல்லிக்கொள்ளலாயினன். நான் மாணிக்கத்தை எனக்குக் கொடுக்கும்படி இவனை இரண்டுதரம் வேண்டிக் கேட்டேன்; இரண்டுதரமும் இவன் மாட்டேனென்று மறுத்துவிட்டான். இதுவரையில் எந்தப்பொருள் வேண்டினாலும் அந்தப் பொருள் எனக்குத் தடையின்றிக் கிடைத்துக் கொண்டிருந்தது; அதனால் இந்தக் குதிரையும் எனக்கு அவசியம் கிடைக்கவேண்டியதே. ஒசீன் அயர்ந்து தூங்குகின்றான்; இவனெழுந்திருப்பதற்குள் நான் இக்குதிரையை அவிழ்த்துவிடுகிறேன்; இதன்மீது ஏறிக்கொள்வேனாகில், உடனே நான் பத்திரமாக என் பட்டணம் போய்ச் சேருவேன். பிறகு, இதுவரையில் ஒருநாளும் தோல்வியடையாத மாணிக்கம் ஒசீனுடையதன்று, என்னுடையதேயாகிவிடும் என்று தனக்குள்தானே சொல்லிக்கொண்டான்.

பிறகு அவன் மெதுவாகச் சந்தடிசெய்யாமல் கூடாரத்தின் கதவைத் திறந்து உள்ளேபோய் உடனே மாணிக்கத்தை யவிழ்த்துவிட்டு அதன்மேலேறி வேகமாக ஓட்டிக்கொண்டு போய்விட்டான்.

மாணிக்கம் சென்ற சிறிதுநேரத்திற்குப் பிறகு ஒசீன் விழித்துக்கொண்டான். பக்கத்தில் மாணிக்கம் காணப்படவில்லை. கூடாரத்தின் கதவு நன்றாகத் திறக்கப்பட்டிருந்தது. உடனே அவன் கோவென்று கூவி மற்றொரு குதிரையின்மேலேறிக்கொண்டான். ஆயினும் அதற்குள் மாணிக்கம் வெகுதூரம் முன்னே போய்விட்டது. இப்படியிருக்கத் திடீரென்று மாணிக்கம் கால் தடுக்கியதாகத் தோன்றியது; அதற்குள் ஒசீன் அதன் சமீபத்தில் போய்ச் சேர்ந்துவிட்டான். இன்னும் ஒரே நிமிஷத்தில் ஒசீன் மாணிக்கத்தின் பக்கத்தில் போய்ச் சேருவான்; ஆயினும் அதற்குள் அவன், அம்மாணிக்கத்திற்குப் பழக்கமான ஒரு வார்த்தையைச் சொல்லிக் கூவினான். அது தன் யஜமானனது குரலென்று தெரிந்துகொண்டு மறுபடி மாணிக்கம் கால் தடுக்காமல் வாயுவேகமாகப் பறந்தது; பிறகு அது கண்ணுக்குப் புலப்படவேயில்லை.

அதுகண்டு ஒசீன் ஒன்றுந் தோன்றாமல் கல்லாய் நின்றுபோனான். அப்புறம் சற்றுநேரம் பொறுத்துமெதுவாகத் திரும்பிச்சென்றான். கடைசியில் கூடாரத்தண்டை போனான்; கதவு திறந்தபடியே கிடந்தது; தான் இதுவரை கண்டதெல்லாம் கனவாயிருக்குமோ! உள்ளே போனால் ஒருகால் அங்கே மாணிக்கமிருக்குமோ! என்று மனத்தில் எண்ணமிட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான். எப்பொழுதும் மாணிக்கம் கட்டியிருக்குமிடம் சூனியமாயிருந்தது. தன் கண்ணுக்குக் கண்ணான மாணிக்கமில்லாத கூடாரத்தில் நிற்க மனந்தாளாமல், இனி ஒருபோதும் இதனுள் நுழையக்கூடாதென்று அவன் வெளியே வந்துவிட்டான். அங்கிருக்கவும் அவனுக்கு மனந் தாளவில்லை; தான் மாணிக்கத்துடனே வாழ்ந்த கூடாரம் கண்ணுக்குத் தெரியாமல் மறையுமளவும் வெகுதூரம் நடந்துபோய் அங்கே ஓரிடத்தில் அழுது புலம்பிக்கொண்டு கீழே வீழ்ந்தான்.

மறுநாள் அந்த வழியாக வந்த ஜனங்கள் அவன் அப்படி யழுது புலம்புவது கண்டு அங்கே சற்று நின்று, ஏனிப்படி நீ விசனப்படுகிறாய், உனக்கு என்ன விபத்து நேரிட்டது என்று அவனை விசாரித்தார்கள். அதற்கு அவன், துவால் திருடன் போல இராத்திரி தன் கூடாரத்திற்கு வந்து தன் குதிரையைத் திருடிக்கொண்டுபோனதும், உடனே தான் விழித்துக்கொண்டு துவால் தன் குதிரைமேலேறிக்கொண்டு போய்விட்டானென்று தெரிந்து தான் மற்றொரு குதிரைமேலேறிக்கொண்டு அவனைத் துரத்திக்கொண்டு ஓடியதும், தன்மீது ஏறிக்கொண்டிருப்பவன் தனது யஜமானனல்லன், யாரோ வேறொரு மனிதனென்று மாணிக்கம் உடனே தெரிந்துகொண்டு கால் தடுக்கி நின்றதும், தான் ஏறிச்சென்ற மற்றொரு குதிரை அதன் வேகத்தைப் பிடிக்கப்போகிற தருணத்தில் தான் குரல் காட்டியதனால், அது அந்தக் குரலைத்தெரிந்து கொண்டு காற்றாய்ப் பறந்தோடித் துவாலிடத்தில் அகப்பட்டுக்கொண்டதுமாகிய தன் கதைகளையெடுத்துக் கூறினான்.

அதைக் கேட்டு அவர்கள் நகைத்து, "நீயேன் அப்பொழுது அப்படிக் கூவவேண்டும்? கூவாதிருந்தால் குதிரையும் ஓடிப்போகாது; நீயும் துக்கப்படாமல் எப்பொழுதும்போலச் சுகமாயிருக்கலாமே" என்று சொல்லிக் கேட்டார்கள்.

அதற்கு ஒசீன் சொன்ன மறுமொழியாவது, "அப்பொழுது நான் அந்த ஒரு வார்த்தை சொல்லாமல் வாயை மூடிக்கொண்டிருந்தேனானால், நீங்கள் சொல்லுகிறபடி என் மாணிக்கம் என்னிடத்திலேயேயிருக்கும், மெய்தான்; ஆயினும் எப்பொழுதும்போல அவ்வளவு சந்தோஷம் எனக்கு ஒருபோதும் உண்டாகாது. ஏனென்றால், அதை மற்றொரு குதிரை வேகத்தில் தோற்றுப்போகச் செய்ததாகுமன்றோ? அதைக்கண்டு யாவரும் இகழமாட்டார்களா? என் பிராணனைப்பார்க்கிலும் என் மாணிக்கத்தையே நான் மேலாக எண்ணியிருக்கிறேனே; நான் எவ்வளவு சங்கடப்பட்டாலும் படுகிறேன், இது என்னுடைய தப்பிதமேயல்லவா? மாணிக்கம் இன்னும் மாணிக்கமாகவும், உலகத்தில் ஒப்பில்லாத பந்தயக் குதிரையாகவும் இருக்கிறதன்றோ? உலகமெல்லாம் எப்பொழுதும் என் மாணிக்கத்தை மேலாகப் புகழ்ந்து பேசுமன்றோ? அதுவே எனக்குப் பெரிய பாக்கியம்" என்று சொல்லிச் சந்தோஷப்பட்டான்.

# வாயில்லா ஜந்துக்களுக்குள்ள செயற்கையறிவு.

## அதிசயமான ஒரு கதை.

**வா**யில்லா ஜந்துக்களுக்குச் செயற்கையறிவு உண்டா, அல்லது அவைகள் செய்யும் செய்கைகளையெல்லாம் இயற்கையறிவினால் மாத்திரமே செய்கின்றனவா என்று ஒரு பத்திராதிபர் கேள்விகேட்டு, சாதாரண ஜந்துக்களுக்கு அவற்றின் சுபாவமான நிலைமையிலும், பிடித்துப் பழக்கப்பட்ட நிலைமையிலும், தமக்குள்ள இயற்கையறிவைச் செயற்கையறிவாக்கிக்கொள்ளும்படியான சக்தியுண்டு என்பதற்கு அதிசயமான சில திருஷ்டாந்தங்களும் எடுத்துக் காட்டியிருக்கிறார். யுத்தியாலோசனைகள் செய்யும் அற்புதமான சாமர்த்தியமமைந்த ஒரு குதிரை அவற்றில் முதன்மையான திருஷ்டாந்தமாம். அக்குதிரை தென்னிஸ் என்னும் பட்டணத்தில் நஷ்வில்லா என்னும் தோட்டத்தில் வசித்த ஒரு கனவானுடையது. அக்குதிரையைப்பற்றி அடியில் சொல்லும் சங்கதிகளெல்லாம் உண்மையென்றே அப்பத்திராதிபர் சொல்லுகிறார்:—

**வியாபார விஷயத்தில் ஒருவன் அந்தக் கனவானுக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தீர்ப்பதற்கு**, அக்குதிரையை அவனுக்குக் கொடுத்துவிட்டான். வேறு விதியில்லாமல் அந்தக் கனவான் அதைப் பெற்றுக்கொள்ள நேரிட்டது. ஆயினும், குதிரையால் அவனுக்கு உபயோகமில்லாமையாலும், வீண்செலவு செய்து அதைக் காப்பாற்றிக்கொண்டிருக்க இஷ்டமில்லாமையாலும், அதை விற்றுவிடலாமென்று விலை கூறினான். சரியான விலைக்கு ஒருவரும் கேட்கவில்லை. அதனால் விதியில்லாமல் அக்குதிரையை அவனே வைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. பிறகு இரண்டு வருஷத்தில் அக்குதிரையினது சாமர்த்தியம் விசேஷமாக விருத்தியாகிவரும் தருணத்தில் கடிவாளமில்லாமலே குதிரை சவாரி செய்யவேண்டுமென்கிற கருத்து உண்டாயிற்று. வண்டிகளில் கட்டும்பொழுதும், குதிரை வாயில் கடிவாளம் போடாமலே ஓட்டவேண்டுமென்று எண்ணினான். அப்படியே அவனுக்குச் சொல்லியபடி அது வேலை செய்துவந்தது. தன் சௌக்கியத்திற்காகவே சேணமும், வண்டியைப் புணைப்பதற்காகக் கழுத்து வட்டவாரும் மாத்திரமே கட்டவேண்டியது அவசியமாயிற்று. குதிரையை வலதுபக்கமானாலும் இடதுபக்கமானாலும் திருப்பவேண்டியிருந்தால், அதைப் பின்னால் தட்டிக்கொடுத்து வாயினால் குறிகாட்டுவது மாத்திரமே போதுமானதாயிருந்தது. அவன் பட்டணத்து வீதிகளில் கால் நடையாக நடந்து சென்றால், அவனது குதிரையும் நாயும் ஒரேதன்மையாக அவனைப் பின்தொடர்ந்து செல்லும். நாயெப்படியோ அப்படியே குதிரையுமிருந்தது.

**இந்தக் குதிரையினது பொருளுணர்ச்சியும் ஞாபகசக்தியும்**, மிகவும் அற்புதமானவை. அதற்குப் பழங்களிடத்தில் பிரியம் மிகவும் அதிகம். அது ஒரு சமயத்தில் பட்டணத்திலிருக்கும்பொழுது ஒருவர் அதற்கு இரண்டுபழம் கொடுக்கவந்தார்கள். பழத்தைப் பார்த்தவுடனே குதிரைக்கு வாயில் தண்ணீர் சுரந்தது. அப்பொழுது குதிரையின் யஜமானன் பழங்கொண்டு வந்தவனைப் பார்த்து, "அப்பா, சற்று நிதானி; நான் உனக்கு ஒரு அதிசயங் காட்டுகிறேன்" என்று சொல்லி, குதிரையை நோக்கி, 'திப்பு, நான் இந்தப் பழத்தை உனக்குக் கொடுக்கமாட்டேன்' என்றான். அதைக் கேட்டவுடனே குதிரையின் முகத்திலிருந்த சந்தோஷக்குறி மாறியது; விசனத்தினால் பல்லைத் திறந்து காட்டியது. அதுகண்டு யஜமானன் மறுபடியும் குதிரையைப் பார்த்து, 'திப்பு, எனக்கு மிகவும் பசியாயிருக்கிறது; இதை நானே புசிக்கிறேன்' என்று சொன்னான். அதைக் கேட்டவுடனே குதிரை வாயை மூடிக்கொண்டு நிராசையாகத் தலையைத் தொங்க விட்டுக்கொண்டது. பிறகு அவன் மறுபடியும் அதைப் பார்த்து, 'நல்லது திப்பு, திப்பு, நீ மிகவும் மனதில் சங்கடப்படுவதாகத் தெரிகின்றது. நாமிருவரும் இதைச் சரிபாதியாகப் பங்கிட்டுப் புசிப்போம், அது உனக்கு இஷ்டந்தானா?' என்று கேட்டான். உடனே அக்குதிரை சந்தோஷப்பட்டுக் கனைத்து நமஸ்காரஞ் செய்வதுபோல் தலை வணங்கியது.

மற்றொரு சமயத்தில் வண்டியிழுக்க அதற்குச் சக்தியில்லாதபோது அது தன் கருத்தை வெளியிட்டது இதைப்பார்க்கிலும் விசித்திரமானது. அதன் யஜமானன் பட்டணத்திற்கு வண்டியோட்டிக்கொண்டுபோகவேண்டுமென்று சேணத்தையெடுத்துக்கொண்டு வரும்படி குதிரைக்குக் கட்டளையிட்டான். புத்திசாலியான அந்தக் குதிரைக்குச் சவாரிக்கு வேண்டிய சேண மின்னதென்றும், வண்டிக்கு வேண்டிய சேண மின்னதென்றும் தெரிந்திருக்கலாம். யஜமானன் கட்டளையிட்டவுடனே குதிரை அங்கிருந்து போய் யஜமானன் சொல்லியபடி வண்டியில் புணைப்பதற்கு வேண்டிய **சேணத்தை வாயில் கவ்விக்கொண்டு வந்தது**. அந்தச் சேணத்தையெடுப்பது மிகவும் கஷ்டம். ஏனெனில், ஒரே ஆணியில் அடியிலே வண்டிச்சேணத்தை மாட்டி அதன்மேல் சவாரிச் சேணம் மாட்டியிருந்தது. அதனால் சவாரிச் சேணத்தையெடுத்து முன்னே கீழேவைத்து அப்புறம் வண்டிச்சேணத்தையெடுக்கவேண்டியதாயிருந்தது. சேணத்தையெடுத்துக்கொண்டு திரும்பி வரும்போது அக்குதிரை காலில் ஏதோ நோயிருப்பதுபோல நொண்டிக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து வந்தது. அதைக்கண்டு யஜமானன் இதென்னவென்று பயந்து, நொண்டியகாலை நன்றாகச் சோதனைசெய்து பார்த்தான். அதில் ஒன்

றும் குற்றம் அவன் கண்ணுக்குத் தோற்றவில்லை அதன்மேல் இன்னது செய்வதென்று நிச்சயிக்க முடியாமல், அதற்கு நோயின்னதென்று தெரிந்துகொள்ளும்படி குதிரையைக் கொஞ்சதூரம் நடக்கும்படி செய்தான். அப்பொழுது அதன் நோய் தணியாமல் வரவரச் சீக்கிரத்தில் அதிகப்படுவதாகக் காணப்பட்டது; குதிரை தனக்கு அதிகமான வருத்தமுண்டாவதாக விசனத்தை வெளியிட்டது.

அதைக்கண்டு யஜமானன் குதிரையைப்பார்த்து, 'திப்பு, உனக்கு ஒருவிதமான துன்பமும் உண்டாயிருப்பதாக என் புத்திக்குத் தோன்றவில்லை நீ ஏதோ ஏமாற்ற வேஷம் போடுவதாகக் காண்கிறது, வண்டியிழுக்க உனக்கு விருப்பமில்லைபோலும், அவ்வளவுதானே!' என்று கேட்டான் அதற்கு அந்தக் குதிரை மிகவும் மனவருத்தத்துடனே மெல்லத் தலையைத் தூக்கி, ஆம் என்று ஒப்புக்கொண்டது. 'நல்லது, இந்தச் சேணத்தை இருந்தவிடத்தில் கொண்டுபோய் வைத்துவிடு' என்று யஜமானன் சொன்னான். அந்த வார்த்தை யஜமானன் வாயினின்று வந்ததுதான்; அப்பொழுதே அந்த மிருகம் சேணத்தை வாயில் கவ்விக்கொண்டு நொண்டி நொண்டி நடந்து குதிரைச்சாலைக்குப் போய் அங்கே முன்னிருந்தபடியே அதை ஆணியில் மாட்டிவிட்டுத் திரும்பி வந்தது. அதற்குக் காலும் குணமாயிற்று.

**மஹாஜன விநோதக் காட்சி.**—3,000 ஜனங்கள் கொள்ளும்படியான ஒரு விஸ்தீரணமான குதிரை நடனசாலையில் வட்டமாகப் படிப்படியாய் பீடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் ஜனங்கள் நிறைய வந்து உட்கார்ந்திருந்தனர். அவ்விடத்தில் நடுவே ஒருவிதமான தளவாடமுமில்லாமல் இக்குதிரை வந்து நின்றது. யஜமானன் அதைப் பின்னே ஓட்டிக்கொண்டு வந்தான். முதலில் அது நாயுடனே பந்தயமோடிற்று. சில தடவைகளில் குதிரையே பந்தயம் ஜயிக்கும்; சில சமயம் தன் தோழனான நாய்க்கும் ஜயமுண்டாகும்படி செய்தது. அதற்கப்பால் வேறு பல விநோதங்களும் காட்டப்பட்டன. அவைகளிலே கடைசியாகக் காட்டப்பட்ட வேடிக்கை மிகவும் அதிசயமானது. அதாவது, அப்பொழுது யஜமானன் குதிரையைப் பார்த்து, 'திப்பு, நேற்று நான் ஒரு கனவானை உன்னிடத்திற்கு அழைத்து வந்தேனே, அவர் இப்பொழுது இந்தச் சாலையில் வந்து நிறைந்திருக்கும் ஜனங்களின் மத்தியில் எங்கேயோ ஓரிடத்திலிருக்கிறார். நீ இப்பொழுது அவரைக் கண்டுபிடிக்கவேண்டும்' என்றான்.

அவன் சொல்லியதைக் குதிரை கருத்துடனே கேட்டுக்கொண்டிருந்தது. அவன் சொல்லி முடிந்தவுடனே அது தலையைத் தூக்கிக்கொண்டு முதல் வரிசை முழுமையும் நன்றாயாராய்ந்து பார்த்தது. அம்மனிதன் அகப்படவில்லை. பிறகு அது மேலே ஏறி முதலில் ஒருவரிசையில் முழுமையும் தேடிப் பார்த்தது; அப்பால் அதற்கு மேல்வரிசையிலும் போய் நன்றாயாராய்ந்து பார்த்தது; எங்கும் அவன் அதன் கண்ணுக்கு அகப்படவில்லை. கடைசியாக ஐந்தாவது வரிசையில் புதிய ஒரு மனிதனெதிரே போய்நின்றது. சொன்னமனிதனை அது சரியாகவே கண்டுபிடித்தது. யஜமானன் குறித்த கனவான் அவனே.

முன் ஒருகாலத்தில் தனக்கு வேண்டாவெறுப்பாயிருந்த குதிரையை இப்பொழுது அந்த யஜமானன் மறுபடி விற்க விருப்பங்கொள்வானானால், எந்தநிமிஷத்தில் வேண்டுமானாலும், முன் அவனுக்குச் சேரவேண்டிய தொகைக்குப் பலமடங்கு அதிகமான தனம் கிடைக்குமென்பதற்குத் தடையில்லை. அப்படியே ஒருவர் இவ்விதமான விநோதக் காட்சிகளுக்கு வேண்டுமென்று அந்த அதிசயமான குதிரையை ஒரு பெருந்தொகைக்குக் கேட்டார்; அதை யிப்பொழுது சொல்லியென்ன? இந்தக் கனவான் கொடுக்கமாட்டேனென்று மறுத்துவிட்டார்.

## பிரயாணம் போவதற்கு உதவும் குறிப்புகள்.

1. குதிரையை அதிக பாரத்தை யேற்றி இழுக்கும்படி செய்யவேண்டாம்.

2. இறுக்கமாயுள்ள கழுத்துவட்ட வாரும் கடிவாளத்தை அழுத்தி இழுப்பதும் வருத்தத்தை யுண்டு பண்ணுகிறபடியால் அப்படி செய்யவேண்டாம்.

3. கூர்மையான கடிவாளத்திரும்புகள் குதிரையின் வாயை மிருதுவாக்கினாலும் பின்பு சுவரனை கெடும்படி செய்கிறபடியினால் சாதாரணமாக அவைகளை உபயோகிக்கக்கூடாது.

4. வண்டியின் சக்கரத்திற்கு நன்றாகக் கொழுப்பு போடவேண்டும். இல்லாவிட்டால் குதிரைக்கு அதிக வருத்தம் உண்டாக்கும்.

5. பிரயாணம் போகும்போது முதலிலும் முடிவிலும் ஒரு மைல் தூரம் மெதுவாய் வண்டியை ஓட்டவேண்டும்.

6. அதிவேகமாய் வெகுதூரம் குதிரையின்மீது ஏறிச் சுவாரி செய்யக்கூடாது. அப்படி அதை வண்டியிலும் கட்டி ஓட்டக்கூடாது.

7. குதிரையின் கடிவாளத்தை முதுகில் தளரவிட்டால், நீ வழி காட்டுவது இன்னதென்று தெரிந்துகொள்ளாமல் இடறிவிழும்.

8. குதிரையைப் பிரயாணத்திற்குக் கட்டவேண்டியிருந்தால் இரண்டு மூன்று தினம் முன்னதாக அதற்கு நல்ல தீனி போடவேண்டும். அந்தத் தீனி இளைப்பை விலக்கும்.

9. பிரயாணத்திற்குப் புறப்படுந் தினத்தில் காலையில் வழக்கமான மணிக்கு முன்னமே குதிரைக்

குத் தீனி கொடுக்கவேண்டும். ஜீரணமாகிற வேளையில் சரீரப்பிரயாசம் அதிகப்பட்டால் குதிரைக்கு கஷ்டம் நேரிடும்.

10. குதிரைக்கு அடிக்கடி உன்னுடைய குரலைக் காட்டி அதைத் தட்டிக்கொடுத்து சந்தோஷப் படுத்தவேண்டும். மிருகங்களும் மனிதர்களைப்போலவே அன்பான வார்த்தையை விரும்புகின்றன.

11. வேகமாய்ப் போய்க்கொண்டிருக்கும்போது குதிரையை மெல்ல நடத்தவேண்டுமென்றாலும் நிறுத்தவேண்டுமென்றாலும் "நில்லு அல்லது ஹோ" என்று சொன்னால் நிற்கும். வேகமாய்ப் போகவேண்டுமானால் "போ" என்று சொன்னால் போகும். இதேமாதிரியான பதங்களை வழக்கமாக பிரயோகித்தாயானால் அவைகளை அது அறிந்துகொண்டு சாட்டி அடிபடுதலை ஒழிக்கும்.

12. அடிக்கடி கடிவாளத்தை அழுத்தி இழுக்கவும் சாட்டியினால் அடிக்கவும் கூடாது. எக்காலத்திலும் அடித்துக்கொண்டிருந்தாயானால் வேலை செய்யாமலிருக்கும்போது அடித்தல் எதற்காகவென்று அறிந்துகொள்ளுகிறது?

13. குதிரையின் வாலைக் குட்டையாக நுனியில் வெட்டி மயிரைக் கத்தரித்துப் போடலாகாது. அது ஈ முதலிய பூச்சிகள் உபத்திரவிக்காமல் ஓட்டிக்கொள்ள சுபாவத்தில் அமைந்திருக்கிறதென்று அறிந்துகொள்ளாமலே கத்தரித்துவிடலாமா?



## வாயில்லா ஜீவன்களுக்கு வைத்தியசாலை.

இந்தப் பக்கத்தில் காட்டப்படும் படத்தில் சென்னபட்டணத்தில் ஜந்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வைத்தியசாலையில் கால் நொண்டியான குதிரைகளுக்கு சிகிச்சை செய்யும் காட்சியைக் காணலாம்.

இந்த வைத்தியசாலையில் வாயில்லா ஜெந்துக்களுக்கு வரும் இதன் அடியில் கண்டிருக்கிற வியாதிகளுக்குச்சிகிச்சைசெய்யப்பட்டுவருகிறது.

சுரம், அஜீரணம், [ப்பு,
விஷசுரம், வயிற்றுக் கடு
பிளவு, பலவீனம்,
பேதி, ஜலதோஷம்,
குட்டி போடமாட்டாத
வருத்தம்,

இருமல், காயங்கள்,
முதுகு கட்டி,
ஈரல் நோய்,
கை கால் எலும்பு உடை
தல்,
திக்குமுக்கு ஆடுதல்,

கால் புண், ஜன்னி,
நாய் வெறி, [ல்,
பத்தைவைத்துக் கட்டுத
சொறி, ரணங்கள்,
சுளுக்கு,

தப்பாக லாடம் அடித்த
காயம்,
முடமான குதிரை மாடு
நாய் முதலானவைக
ளுக்குச் சிகிச்சை.

சிகிச்சைக்கு வேண்டிய மருந்துகள் சொற்ப விலைக்குக் கொடுக்கப்படும். ஆனால் மருந்துகள் வெளியில் கொடுத்தனுப்புவதில்லை. சிகிச்சைக்கு வந்திருக்கிற ஜெந்துக்களுக்கு சொந்தக்காரர்கள் தீனி கொண்டுவந்து கொடுக்கலாம். வைத்தியசாலையில் கொடுக்கவேண்டுமானால் அதற்குப் பிடித்த செலவு சொற்பம் கொடுக்கவேண்டியது.

இந்த வைத்தியசாலையில் ரணவைத்தியர்கள், சிகிச்சோபசாரம் செய்பவர்கள், லாடக்காரர்கள் முதலான உதவிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சொற்ப செலவில் குதிரைகளுக்கு லாடம் அடிக்கப்படும். இவ்விதமாக ஏற்பட்டிருக்கிற ஒழுங்குபாட்டை யார்தான் தேடார்கள்?

Printed at the S. P. C. K. Press, Vepery, Madras—1902.

பின் பக்கத்தைப் பார்க்க.

# வாயில்லா ஜீவன்களுக்கு வைத்தியசாலை.

முன் பக்கத்தில் காட்டிய சித்திரப்படத்தில் சென்னபட்டணத்தில் ஜந்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வைத்தியசாலையில் கால் நொண்டியான குதிரைகளுக்குச் சிகிச்சை செய்யும் காட்சியைக் காணலாம்.

இந்த வைத்தியசாலையில் வாயில்லா ஜந்துக்களுக்கு வரும் இதன் அடியில் கண்டிருக்கிற வியாதிகளுக்குச் சிகிச்சை செய்யப்பட்டுவருகிறது.

சுரம், அஜீரணம்,
விஷசுரம், வயிற்றுக்கடுப்பு,
பிளவு, பலவீனம்,
பேதி, ஜலதோஷம்,
குட்டி போடமாட்டாத வருத்தம்,
இருமல், காயங்கள்,
முதுகு கட்டி,
ஈரல் நோய்,
கால் எலும்பு உடைதல்,
திக்குமுக்கு ஆடுதல்,
கால்புண், சன்னி,
நாய் வெறி,
பத்தைவைத்துக் கட்டுதல்,
சொறி, ரணங்கள்,
சுளுக்கு,
தப்பாக லாடம் அடித்த காயம்,
முடமான குதிரை மாடு நாய் முதலானவைகளுக்குச் சிகிச்சை.

சிகிச்சைக்கு வேண்டிய மருந்துகள் சொற்பவிலைக்குக் கொடுக்கப்படும். ஆனால் மருந்துகள் வெளியில் கொடுத்தனுப்புவதில்லை. சிகிச்சைக்கு வந்திருக்கிற ஜந்துக்களுக்கு சொந்தக்காரர்கள் தீனி கொண்டுவந்து கொடுக்கலாம். வைத்தியசாலையில் கொடுக்கவேண்டுமானால் அதற்குப் பிடித்த செலவு சொற்பம் கொடுக்கவேண்டியது.

இந்த வைத்தியசாலையில் ரணவைத்தியர்கள், சிகிச்சோபசாரம் செய்பவர்கள், லாடக்காரர்கள் முதலான உதவிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சொற்ப செலவில் குதிரைகளுக்கு லாடம் அடிக்கப்படும். இவ்விதமாக ஏற்பட்டிருக்கிற ஒழுங்குபாட்டை யார்தான் தேடார்கள்?